THIRU K. M. SUBRAMANIAM : Is the Government aware that super markets are generally the luxury of advanced countries where it is difficult to sell goods and ordinary well-established markets with less expenses are enough for countries where there is shortage and particularly to India and Tamil Nadu?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Probably the hon. Member is under the impression that the State Government's monies are involved in this matter.

THIRU K. M. SUBRAMANIAM : Whomsoever's monies they are, it is national wealth. That is all.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : As I answered, excep in the case of Tiruchirappalli super market and Madurai super market, all the other super markets are not losing money, but they are helping to hold the price line. Similarly in smaller municipalities and major town panchayats we have started mini-super markets in 28 of them. Exception in that special mini market opened for public servants in Coimbatore, all the mini markets are not losing. We are satisfied that we are not losing. The object is to hold the price line.

திருமதி. த. ந. அனந்தநாயகி : இந்தக் கூட்டுறவு சிறப்பங்காடிகள் எல்லாம் சொந்தக் கட்டடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றனவா ? அல்லது தனி நபர் கட்டடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : சில அங்காடிகள் சொந்தக் கட்டடங்களில் இருக்கின்றன. சில வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன.

ஆடுதுறையிலுள்ள விவசாயப் பண்ணைக் கட்டடம்.

* 235 வினு.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஆடுதுறையில் தற்போது காலியாக உள்ள அரசாங்க விவசாயப் பண்ணைக் கட்டடங்களை சுற்றுலா மாளிகையாக ஆக்க திட்டம் ஏதேனும் தற்போது அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆடுதுறையிலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது அரசுக்கட்டிடம் எதுவும் காலியாக இல்லை. அங்குள்ள கட்டிடத்தைச் சுற்றுலா மாளிகையாக்கும் திட்டம் எதுவும் இல்லை.

மின்சாரம் விநியோகம் செய்யும் தனியார் கம்பெனிகள்.

* 256 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மின்சாரம் விநியோகம் செய்யும் தனிப்பட்ட கம்பெனிகள் ஏதேனும் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஆம். ஏழு தனிப்பட்ட கம்பெனிகள் தமிழ்நாட்டில் மின் விநியோகம் செய்கின்றன. அவை பின்வருமாறு :—

1. நாகப்பட்டினம் மின் விநியோகக் கம்பெனி.
2. கும்பகோணம் மின் விநியோக கார்ப்பரேஷன்.
3. வேலூர் மின் விநியோக கார்ப்பரேஷன்.
4. சேலம்-ஈரோடு மின் விநியோக கம்பெனி.
5. திருநெல்வேலி-தூத்துக்குடி மின் விநியோக கம்பெனி.
6. திருச்சி-ஸ்ரீரங்கம் மின் விநியோக நிறுவனம்.
7. செங்கோட்டை மின் வழங்கு உரிமதாரர்.

திரு. என். கிட்டப்பா : நம் கழக அரசு பொறுப்பேற்றவுடன் சிலவிடங்களில் தனியார் மின்சார நிறுவனங்களை அரசுடைமையாக்கியது. அதுபோல இப்போ திருக்கிற இந்தத் தனிப்பட்ட மின்சார விநியோகம் செய்யும் உரிமங்களையும் அரசுடைமையாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அரசுடைமையாக்குவது என்பதுதான் அரசின் கொள்கையாகும். அரசுடைமையாக்கி நோட்டிபை செய்யப்பட்ட கம்பெனிகள் விவகாரம் நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தினால் தீர்ப்புகள் வந்ததற்குப் பின்னால்தான் முடிவுகள் எடுக்கப்படும்.

திரு. கு. காமாட்சி : திருச்சியில் இருக்கிற ஒரு தனியார் நிறுவனம் விவசாயத்திற்கு வேண்டிய பம்ப் செட்ஸ் கனக்ஷன் கொடுப்பதற்குக்கூட தாமதம் ஏற்படுத்தி விநியோகக் கட்டணத்தையும் அதிகமாக்கியிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படி ஒரு விண்ணப்பம் வந்திருக்கிறது. பரிசிலனையில் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏழு நிறுவனங்கள் தனியார் துறையில் இருக்கின்றன என்று சொன்னாலும் அவை மூன்று பேர்களுக்குத்தான் சொந்தமாக உள்ளன. சேஷசாயி, ராஜும் ராமசாமி, காட்வில்ஸ் கம்பெனி என்பவர்களுடையது. இந்த நிறுவனங்களில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுக்கு நமது வாரியத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்குள்ள ஊதியம் கூடக் கிடைக்காமல் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தனிப்பட்ட கம்பெனிகளில் சட்டதிட்டங்களுக்கொப்ப கொடுக்கிறார்கள். நாம் சட்ட அளவில் கட்டாயப்படுத்த முடியாது. சுமுகமாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : நோட்டிபை செய்யப்பட்ட ஏழு நிறுவனங்கள் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிற காரணத்தினால் செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். இதற்கிடையில் மின்சாரக்கட்டணம், மீட்டர் ரென்ட், டெப்பாஸிட் எமௌண்ட் இவைகளை எல்லாம் அந்த நிறுவனங்கள் உயர்த்தியிருக்கிறார்களே ! அப்படி உயர்த்தக்கூடாது என்று அரசாங்கம் தடை விதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சட்டத்தை ஆராய்ந்து பார்த்தோம். உயர்த்தக் கூடாது என்று தடை விதிக்க சட்ட பலமில்லை என்று கருதுகிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அதிகமாக வசூல் செய்கிறவர்களைத் தடுக்க முடியாது என்று சொன்னார்கள். இப்போது நம் அரசாங்க மின்வாரியத்தில் ஒன்பது பைசா என்றிருக்கும்போது அவர்கள் 12½ பைசா என்று உயர்த்தியிருக்கிறார்கள், திருச்சி-தென் மதராஸ் நிறுவத்தினர் அதேமாதிரி ஐந்து ரூபாய் இருந்த மினிமம் சார்ஜை 15 ரூபாய் என்று உயர்த்தியுள்ளார்கள். இவற்றினையெல்லாம் உயர்த்தியது போக சில விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் இடைஞ்சல்கள் செய்து கொண்டு வருகிறார்கள். இதைத் தடுக்க சட்டத்தில் இடமில்லையென்று சொன்னால் எப்படித்தான் விவசாயிகளுக்கு உதவி செய்ய முன்வருவது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இதிலிருந்து கட்டணம் விதிப்பதில் மின்சார வாரியம் ஏமாந்திருக்கிறது என்பது தெரிகிறது.

திரு. என். கணபதி : குட்டந்தை மின் கழகம் சம்பந்தப்பட்ட வழக்கு ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு முன்பாகவே முடிந்துவிட்டதாக அறிகிறேன். ஆகவே அந்த மின்கழகத்தினை எடுப்பதில் ஏன் அரசு காலதாமதம் செய்கிறது? தயக்கம் காட்டுகிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நாகப்பட்டினம், கும்பகோணம், செங்கோட்டை இம்மூன்றில் செங்கோட்டை உரிமைதாரர்களுக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்ட காரணத்தினால் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. பாக்கி இரண்டு கம்பனிகள் விஷயத்தில் நமக்குச் சாதகமாக இருந்த காரணத்தினால் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருக்கிறார்கள். முடிவு வந்ததன் பின்னால் யோசித்து தீர்மானமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தத் தனியார் கம்பனிகளை எல்லாம் தேசியமயமாக்கும் முறையில், அந்தந்த இடங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் இன்று பம்ப் செட்ஸ் இணைப்புகளுக்கு அதிகப்படியான கட்டணம் கட்டவேண்டியிருப்பதால் அங்குள்ள விவசாயிகளுக்கு உதவித் தொகையாக அந்த வித்தியாசத்தை அரசாங்கம் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது எலக்ட்ரிசிட்டி போர்ட் சார்பாக வசூலிக்கப்படுகிற தொகையால் இந்தப் போர்ட் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட எட்டு கோடி ரூபாய், ஒன்பது கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டத்தைத் தாங்கிக் கொண்டுதான் இந்தக் கட்டணத்தை நாம் இன்று பெற்று வருகிறோம். அதையே மேலும் உயர்த்தலாமா என்ற யோசனை எல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. இதில் போய் தனியார் வசூலிக்கிற அதிகக் கட்டணத்திற்கு மானியத்தொகை கொடுப்பது என்பது இயலாத காரியம்.

Bus accident near Queen Mary's College.

* 257 *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there was any serious bus accident in Madras City near the Queen Mary's College about the 21st January, 1971 ; and

(*b*) if so, the details thereof?